**ம.அ.4.ந.க.எண்.இ1/4396/2009**
**ஆணையர் அவர்களின் 09.06.2009 நாளிட்ட குறிப்பு**

## 22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :201/2009 பொருள் எண்.1

### பழுதடைந்த சமையல் கூட கட்டிடம் இடிக்க அனுமதி

வார்டு.56 மண்டலம்–4

| | |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–4 , பகுதி – 12. வார்டு–56 சபாபதி தெருவில் உள்ள பழுதடைந்த சமையல் கூட கட்டிடம் |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சென்னை மாநகராட்சி<br>1974 ஆண்டு கட்டப்பட்டதாகும். |
| கட்டிடத்தின் பரப்பளவு (சதுர அடியில்) | 920 ச.அடி |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 3194.92 |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | இக்கட்டடம் பழுதடைந்து பயன்படாத நிலையில் உள்ளது, ஆகையால் இடிக்கப்பட வேண்டியுள்ளது, |
| திட்டம் முன்மொழிதல் | பழுதடைந்துள்ள கட்டிடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் புதிய சமையலறை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது, |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண் மற்றும் நாள். | 4–வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.01, நாள்.25.02.2009 |

எனவே, மேற்கண்ட சமையல் கூட கட்டிடத்தை இடிக்க நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“09.07.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.21/2009 நாள் 09.07.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“13.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 66/2009 , நாள்: 13.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.4.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.6.ந.க.எண்.இ1/1418/2009**
**ஆணையர் அவர்களின் 06.06.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :202/2009 பொருள் எண்.2

**உருது நடுநிலைப் பள்ளி வளாகத்தின் பின்புறமுள்ள பழுதடைந்த கட்டிடத்தை இடிக்க அனுமதி**

| வ.எண் | வார்டு எண்.93 | மண்டலம்–6 |
|---|---|---|
| 01. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | வார்டு–93, பீட்டர்ஸ் சாலையில் சென்னை மாநகராட்சி உருது நடுநிலைப் பள்ளி வளாகத்தின் பின்புறம் உள்ள சமையலறை கூடம் மட்டும் செயல்படும் மிகவும் பழுதடைந்த கட்டிடம். |
| 02. | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1969 பணித் துறை |
| 03. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.13,598.70 |
| 04. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | தரை தளம் 1384 சதுர அடிகள்<br>முதல் தளம் 1384 சதுர அடிகள் |
| 05. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | இக்கட்டிடம் பழமை காரணமாக சிதிலமடைந்து விட்டதால் மழைக் காலங்களில் கூரை மற்றும் சுவர்களில் நீர் கசிவு ஏற்படுகின்றது. பக்கச் சுவர் மற்றும் தரைதள ஆர்.சி.சி. தள மேற்கூரை ஆகியவற்றில் விரிசல்கள் ஏற்பட்டும், மர ரீப்பர்கள் மற்றும் காரைகள் பெயர்ந்தும் பழுதுபார்க்க இயலாத நிலையில் உள்ளதால் இடிக்கப்பட வேண்டியுள்ளது |
| 06. | திட்ட முன் மொழிதல் | சிதிலமடைந்த கட்டிடத்தை இடித்து விட்டு, சென்னை மாநகராட்சி உருது நடுநிலைப் பள்ளி வளாகத்தின் பின்புறம் உருது நடுநிலைப் பள்ளிக்கென மூன்று வகுப்பறைகள், சத்துணவு சமையலறை, பொருட்கள் வைப்பறை மற்றும் கழிவறை ஆகியவற்றை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 07. | வார்டு குழுவின் பரிந்துரை, நாள் விவரம் | 6வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.10,<br>நாள் : 29.01.2009 |

எனவே, மேற்சொன்ன பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"09.07.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.22/2009 நாள் 09.07.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"13.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.67/2009, நாள்: 13.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :203/2009 பொருள் எண்.3

**நெடுஞ்சாலைத்துறை, சாலையினை அகலப்படுத்த இடையூறாக உள்ள பொதுக் கழிப்பிடத்தை இடித்து அகற்றப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

| வ.எண். | வார்டு – 153 | மண்டலம்–10 |
|---|---|---|
| 01. | இடிக்கப்பட்ட கட்டடத்தின் விவரம் | தரமணி 100 அடி சாலை வேளச்சேரி மயான பூமி அருகில் சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்ட R.C.C. Roof–ல் ஆன பொதுக் கழிப்பிடம் |
| 02. | கட்டடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 2000, மண்டலம்–10. |
| 03. | கட்டடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.4,30,921.00 |
| 04. | கட்டடம் இடிக்கப்பட்டதற்கான காரணம் | நெடுஞ்சாலைத்துறை, சாலையினை அகலப்படுத்த இடையூறாக உள்ள உபயோகமற்ற பொதுக்கழிப்பிடத்தை இடித்து அகற்றி இடத்தை துரிதமாக ஒப்படைக்குமாறு கோரியதனால். |
| 05. | இடிக்கப்பட்ட கட்டடத்தின் பரப்பளவு | சுமார் 447 சதுர அடி |
| 06. | திட்ட முன் மொழிதல் | சாலையினை நெடுஞ்சாலை துறை மூலம் ஆறு வழி சாலையாக அகலப்படுத்தும் பணிக்கு |
| 07. | சம்மந்தப்பட்ட துறை மூலம் பெறப்பட்ட இழப்பீட்டுத் தொகை விவரம் | ரூ.10,32,000.00 சென்னை மாநகராட்சி கருவூல செலுத்துச் சீட்டு எண்.27404, நாள்:23.01.2009 |
| 08. | வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள் | 10வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.779, நாள்:22.10.2008 |

எனவே, மேற்கண்ட பொதுக்கழிப்பிடத்தை மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இடிக்கப்பட்டதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“9.07.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு ( பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.16/2009, நாள் 9.07.2009-ன்படி இதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ".

“13.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 68/2009 , நாள்: 13.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ".

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.10.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.பி3/2323/2009**
**ஆணையர் அவர்களின்9.07.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :204/2009 பொருள் எண்.4

**சென்னை மாநகராட்சி தொடக்கப்பள்ளிகளில் முதல் வகுப்பில் ஆங்கில வழி கல்வி திட்டம் அறிமுகம் செய்வது சம்மந்தமாக.**

2009–2010 ஆம் கல்வியாண்டில் 25 மாநகராட்சி தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பில் ஆங்கில வழி வகுப்பு துவங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், தற்போதைய பெற்றோர்களின் மனநிலைப்படி ஆங்கில வழி வகுப்புகளில் மாணவர்களை சேர்க்கும் போக்கு அதிகரித்துள்ளது. எனவே, அதிக மாணவர்களை மாநகராட்சி பள்ளிகளில் சேர்க்கும் பொருட்டு ஒரு பிரிவு ஆங்கில வகுப்பு துவக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதே வேளையில் அரசின் கொள்கை முடிவான, தொடக்கக்கல்வி தமிழ் வழியில் அமைய வேண்டும் என்பதன் அடிப்படையில், தமிழ் வழிக் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறையாதபடி பார்த்துக் கொள்ளப்படும்.

எனவே, மாநகராட்சி தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் நடைபெறும் 25 பள்ளிகளில் ஒரே ஒரு பிரிவு மட்டும் ஆங்கில வழிக் கல்வி முறை வகுப்பு வாரியாக மாணவர்களை சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஒன்றாம் வகுப்பில் ஆங்கில வழியில் பயிலும் மாணவன் பன்னிரெண்டாம் வகுப்பு வரை ஆங்கில வழியில் பயில உறுதி செய்யப்படும். மேலும், தொடக்கப்பள்ளியில் ஐந்தாவது வரை பயிலும் மாணவன் 6வது வகுப்பு வரும் போது அப்பள்ளியின் அருகாமையிலுள்ள நடுநிலை/உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளியில் கண்டிப்பாக ஆங்கில மொழி பிரிவில் சேர்க்கப்படுவது உறுதி செய்யப்படும்.

சென்னை மாநகராட்சியில் 10 மண்டலங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட 25 பள்ளிகளில் (மழலையர் பள்ளி நடைபெறும் இடங்கள்) 2009–2010 கல்வியாண்டில் இத்திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதால் ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழி பயிற்சி அளிக்க வேண்டியது அவசியமாகிறது. இதற்கு அனைவருக்கும் கல்வி திட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கலாம். ஒவ்வொரு பள்ளியில் இருந்து குறைந்தது ஒரு ஆசிரியரை உடனடியாக பயிற்சிக்கு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இடைநிலை ஆசிரியர்களுக்கு 20 நாட்கள் பணியிடை பயிற்சி அனைவருக்கும் கல்வி திட்டத்தின் மூலம் அளிக்கப்படுகிறது. அதில் 10 நாட்களை தொடர்ச்சியாக ஆங்கில மொழி பயிற்சி அளிக்க அனைவருக்கும் கல்வி திட்டம் மாநில திட்ட அலுவலரைகேட்டுக் கொள்ளலாம்.

தற்போது தமிழகத்தின் அனைத்து அரசு /அரசு உதவி பெறும் / நகராட்சி / மாநகராட்சி பள்ளிகளில் செயல்வழி கற்றல் (ABL) எனும் முறை பின்பற்றப்படுகிறது. இதன்படி ABL அட்டைகள் மூலமே கற்பித்தல் பணி நடைபெறுகிறது. தமிழில் மட்டுமே இந்த அட்டைகள் தயாரிக்கப்படுகின்றன. எனவே ஆங்கில வழி கற்பித்தலுக்கான ABL அட்டைகளை தயார் செய்து வழங்க அனைவருக்கும் கல்வி திட்ட அலுவலகத்தை நாடுவதென்று திட்டமிடப்பட்டுள்ளது.

**தேவைப்படும் அட்டைகள் விவரம் பின்வருமாறு:–**

| வகுப்பு | மாணவர் எண்ணிக்கை | பாடங்கள் மற்றும் தேவைப்படும் அட்டைகள் |
|---|---|---|
| ஒன்று | 2500 | தமிழ் – 2500<br>ஆங்கிலம்– 2500<br>கணிதம் – 2500<br>அறிவியல்– 2500<br>––––––<br>மொத்தம் 10,000<br>–––––– |

**<u>க.து.ந.க.எண்.பி3/2323/2009</u>**

மாநகராட்சி பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பில் ஆங்கில மொழி பிரிவு 2009–2010 கல்வியாண்டில் துவங்க மொத்தம் 10,000 ABL அட்டைகள் ஆங்கிலத்தில் தயாரித்து வழங்க மாநில திட்ட அலுவலர், அனைவருக்கும் கல்வி திட்டத்தை கேட்டுக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாநகராட்சி வரவு செலவு திட்டம் 2009–2010 ல் அறிவிக்கப்பட்ட மாநகராட்சி பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பில் ஆங்கில மொழி பிரிவு தொடங்கும் திட்டத்தை செயல்படுத்த கீழ்காணும் இனங்கள் செயல்படுத்துவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

1. சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 25 தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் 2009–2010 ஆம் கல்வியாண்டில் ஒரு ஆங்கில வழிப்பிரிவு தொடங்கவும்,

2. மழலையர் வகுப்பு செயல்படும் 25 பள்ளிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தவும்,

3. இத்திட்டம் செயல்படுத்தப்பட இருக்கும் 25 பள்ளிகளில் உள்ள இடைநிலை ஆசிரியர் பள்ளிக்கு ஒருவர் வீதம் தேர்ந்தெடுத்து, அவர்கள் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் மீது 10 நாட்கள் பணியிடைப் பயிற்சி வழங்கவும்,

4. ஆங்கில மொழி பிரிவு மாணவர்கள் பயன்படுத்த ஆங்கில ABL அட்டைகள் தயாரித்து வழங்க அனைவருக்கும் கல்வி திட்ட இயக்குநருக்கு கடிதம் எழுதவும் ஆங்கில மொழி பாடப் பிரிவு துவங்கப்படும் பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளைசெய்து தரவும் (Infrastructures)

5. இதுபற்றி செய்தித் தாள்களில் விளம்பரபடுத்த, மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களுக்கு குறிப்பு அனுப்பவும்,

நிலைக் குழு (கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

09.07.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.24/2009 நாள் 09.07.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>**வ.து.ந.க.எண்.ஜி1/14411/2008**</u>
<u>**ஆணையரின் 09.02.2009 நாளிட்ட குறிப்பு**</u>

<u>**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**</u>

தீர்மான எண் :205/2009 பொருள். எண்.5

<u>**தொழில் வரி உயர்த்துதல்**</u>

தொழில் வரியினை உயர்த்துவது குறித்து வருவாய்துறை மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பிற்கு வரிவிதிப்பு மற்றும் நிதி நிலைக்குழுவின் ஒப்புதல் தீர்மானம் எண்.254/08, நாள் 24.10.2008ல் பெறப்பட்டது. பின்னர், தொழில் வரிக்கான அரை ஆண்டு சராசரி வருமான விகிதத்தில் ரூ.75,000/– முதல் ரூ.3,00,000/– வரையிலான விகிதத்திற்கு தனியே வரி நிர்ணயம் செய்வது குறித்து நடவடிக்கை எடுப்பது குறித்து கூர்ந்தாய்வு செய்யப்பட்டது.

1998ஆம் ஆண்டைய தமிழ்நாடு முனிசிபல் சட்டத்தில், 01.10.1998 முதல், தொழில் வரிக்கு சராசரி அரை ஆண்டு விகிதமும், அரை ஆண்டு தொழில் வரியும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு

| வரிசை எண் | சராசரி அரையாண்டு வருமானம் **முதல்** | **வரை** | அரையாண்டு வரி |
|---|---|---|---|
| 1. | ரூ.21,001/– வரை | | Nil |
| 2. | ரூ.21,001/– | ரூ.30,000/– | ரூ.60/– |
| 3. | ரூ.30,001/– | ரூ.45,000/– | ரூ.150/– |
| 4. | ரூ.45,001/– | ரூ.60,000/– | ரூ.300/– |
| 5. | ரூ.60,001/– | ரூ.75,000/– | ரூ.450/– |
| 6. | ரூ. 75,001/– க்கு மேல் | | ரூ.600/– |

மேற்படி சராசரி அரை ஆண்டு விகிதமும், அரை ஆண்டு தொழில் வரியும், சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி, கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் அனைத்து முனிசிபாலிட்டிகளுக்கும் ஒரே அளவில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தினைத் தொடர்ந்து, சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919ல் பிரிவு எண்.138 பி–ல் தக்க திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இச்சட்டப்பிரிவின் உட்பிரிவு எண்.13ன்படி, ஐந்தாண்டுக்கொரு முறை மேற்படி தொகையினை 25 விழுக்காட்டுக்கு குறையாமலும், 35 விழுக்காட்டிற்கு மிகாமலும் உயர்த்திட வேண்டுமென்பதால், 01.10.2003லிருந்து தொழில் வரி உயர்த்தப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

| வரிசை எண் | சராசரி அரையாண்டு வருமானம் **முதல்** | **வரை** | 1.10.2003 க்கு முன்னர் இருந்த அரையாண்டு வரி | 1.10.2003 முதல் வசூலிக்கப்படும் அரையாண்டு வரி |
|---|---|---|---|---|
| 1. | ரூ.21,001/– வரை | | Nil | Nil |
| 2. | ரூ.21,001/– | ரூ.30,000/– | ரூ.60/– | ரூ.75/– |
| 3. | ரூ.30,001/– | ரூ.45,000/– | ரூ.150/– | ரூ.188/– |
| 4. | ரூ.45,001/– | ரூ.60,000/– | ரூ.300/– | ரூ.390/– |
| 5. | ரூ.60,001/– | ரூ.75,000/– | ரூ.450/– | ரூ.585/– |
| 6. | ரூ. 75,001/– க்கு மேல் | | ரூ.600/– | ரூ.810/– |

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919 பிரிவு எண்.138(பி), உட்பிரிவு எண்.13ல், ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அரையாண்டு வரியினை உயர்த்திட மட்டுமே வழிவகை செய்யப்பட்டுள்ளது. (The rate of tax specified under sub-section(2) shall be revised by the Council once in every five years and such revision of tax shall be increased not less than twenty-five per cent and not more than thirty-five per cent of the tax levied immediately before the date of revision). இதன்படி, சில நகராட்சிகள் தொழில் வரியினை உயர்த்த தக்க அறிவிக்கைகளையும் வெளியிட்டுவிட்டது.

ஏனவே, மேற்குறிப்பிட்ட சட்டப்பிரிவின்படி, ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அரை ஆண்டு விகிதத்தின் அடிப்படையில் அரை ஆண்டு தொழில் வரியினை 01.10.2008 முதல் உயர்த்த வேண்டியுள்ளது. புதியதாக அரை ஆண்டு விகிதமும், அரை ஆண்டு தொழில் வரியும், தமிழ்நாடு முனிசிபல் சட்டத்தில் தேவையான மாற்றங்கள் அரசால் ஏற்படுத்தப்பட்ட பின்னரே செய்ய இயலும். புதிய சட்டங்கள் ஏதும் முன்தேதியிட்ட நாளில் (Retrospective effect) இருந்து அமுல் செய்ய இயலாது என்பதால்,

**1)** தற்போது நடைமுறையில் உள்ள சட்ட விதியின்படியும், ஏற்கனவே அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட அரையாண்டு வருமானத்தின் அடிப்படையிலும் **01.10.2008** முதல் உயர்த்தப்படவேண்டியுள்ள தொழில் வரியினை பின்வருமாறு உயர்த்திடவும்,

| வரிசை எண் | சராசரி அரையாண்டு வருமானம் **முதல்** | **வரை** | **1.10.2003** முதல் வசூலிக்கப்படும் அரையாண்டு வரி | **1.10.2008** முதல் நிர்ணயம் செய்யப்பட வேண்டிய அரையாண்டு வரி |
|---|---|---|---|---|
| **1.** | ரூ.**21,001/–** வரை | | Nil | Nil |
| **2.** | ரூ.**21,001/–** | ரூ.**30,000/–** | ரூ.**75/–** | ரூ.**100/–** |
| **3.** | ரூ.**30,001/–** | ரூ.**45,000/–** | ரூ.**188/–** | ரூ.**235/–** |
| **4.** | ரூ.**45,001/–** | ரூ.**60,000/–** | ரூ.**390/–** | ரூ.**510/–** |
| **5.** | ரூ.**60,001/–** | ரூ.**75,000/–** | ரூ.**585/–** | ரூ.**760/–** |
| **6.** | ரூ. 75,001/– க்கு மேல் | | ரூ.**810/–** | ரூ.**1095/–** |

**2)** புதியதாக சராசரி அரையாண்டு வருமான விகிதத்தினை ஏற்படுத்தி, அதற்கு புதியதாக தொழில் வரியினை நிர்ணயம் செய்வது குறித்து முடிவெடுக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம், **1919**, பிரிவு எண்.**98**ன்படி மன்றத்தின் அனுமதி பெற்று, பொதுமக்களின் ஆட்சேபணைகளை கேட்டறிந்து, மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு தனியே கருத்துரு அனுப்பிட தனியே நடவடிக்கையினைத் தொடர்ந்திடவும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"22.5.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.**49**, நாள்: 22.5.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்